**IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR**

**O.S. No. 409/2007**

Deposition of **P.W.1** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt.K. Janaki, Gr. III Bench Clerk of this court on 27.02.2025 in accordance with the provision of Act 1 of 1873.

Name : தங்கராஜ் Father's Name : பெரியசாமி

துவக்க நேரம்: 03.27 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1) தாவா சொத்து முழுவதும் யார் பெயரில் உள்ளது என்றால் என் பெயரில்தான் உள்ளது. வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில்தான் கடந்த 25.02.2008 தேதியன்று 1-ம் பிரதிவாதி பெயரில் பாதை அமைப்பதற்காக தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதிக்கொடுத்தேன் என்றால் சரிதான்.

2) தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் எழுதிக்கொடுத்த சொத்தினை வழக்கு சொத்து விவரத்திலிருந்து நீக்கவில்லை என்றால் சரிதான். தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் எழுதிக்கொடுத்த சொத்தினை பாதை அமைக்கக்கூடாது என பரிகாரம் ஏதேனும் கோரியுள்ளேனா என்றால் சரியல்ல.

3) நான் தாக்கல் செய்த வழக்கு பரிகாரத்தில் தாவா சொத்தில் பாதை அமைக்கக்கூடாதென என்று பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன்.

இவ்வழக்கு, என்னுடைய சுவாதீனத்தை தொந்தரவு செய்யக்கூடாது என பரிகாரம் மட்டும் கேட்டுள்ளேன் என்றாலும் தாவா சொத்தில் பாதை அமைக்கக்கூடாதென பரிகாரம் கோரவில்லை என்றாலும் சரியல்ல.

4) தானசெட்டில்மெண்ட் மோசடியாக எழுதிக்கொடுத்ததாக நான் சொல்லும் நிலையில் தானசெட்டில்மெண்ட் எழுதிய எத்தனை நாட்களுக்குபிறகு ஆவணம் எழுதியது தெரிய வந்தது என்றால் 2,3 மாதங்களுக்குபிறகு தெரிய வந்தது. மேற்படி தானசெட்டில்மெண்ட் பத்திரம் மோசடியானது என சொல்லி கடந்த 2018 அன்று தான் இத்தாவாவை திருத்தம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

5) தானசெட்டில்மெண்ட் பத்திரம் மோசடியானதென சொல்லி ஏதேனும் பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் இல்லை. கடந்த 2008-ல் ஏற்படுத்தப்பட்ட தானெசெட்டில்மெண்ட் பத்திரத்தை, செல்லாது என பரிகாரம் கேட்காமல் அந்த சொத்தின்மீது நிரந்தரதடை உறுத்துக்கட்டளை நான் கோருவது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

6) காலவரையறைச்சட்டத்தின்படி தானசெட்டில்மெண்ட் பத்திரத்திற்கு எதிராக நான் பரிகாரம் கோர முடியாது என்றால் சரியல்ல. இந்த வழக்கு தாக்கல் செய்தபிறகுதான் தானசெட்டில்மெண்ட் பத்திரம் ஏற்படுத்தப்பட்டது. எனவே அந்த ஆவணம்தான் செல்லாது. அ.வ.எண்.548/2006 தொடர்புடைய எதிர்வழக்குரை, வாதுரை ஆகியவைகளை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளது ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அ.வ.எண்.548/2006-ல் உள்ள வழக்குமூலம் வேறு, இந்த வழக்கின் வழக்குமூலம் வேறு எனவே அந்த வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களை

இந்த வழக்கில் தாக்கல் செய்ய முடியாது என்றாலும் அந்த ஆவணங்கள் பிரதிவாதியை கட்டுப்படுத்தாது என்றாலும் சரியல்ல.

7) அ.வ.எண்.548/2006-ல் தாக்கல் செய்த ஆணையர் அறிக்கை மற்றும் மாதிரி வரைபடம் ஆகியவற்றை நான் அந்த வழக்கில் கடந்த 18.01.2007 அன்று தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். கடந்த 25.02.2008 தேதியன்று தானசெட்டில்மெண்ட்ஐ 1-ம் பிரதிவாதிக்கு நான் எழுதிக்கொடுத்தேன் என்றால் எழுதிக்கொடுத்தேன். ஆனால் அது மோசடியாக எழுதி வாங்கப்பட்டுள்ளது.

8) என்னிடமிருந்து தானசெட்டில்மெண்ட் பெற்ற 1-ம் பிரதிவாதி அதன்பிறகுதான் கப்பிசாலை அமைத்துள்ளார் என்றால் சரியல்ல. இன்றுவரை எழுதிக்கொடுத்த இடத்தில் எந்தவித சாலையும் அமைக்கவில்லை. அ.வ.எண்.548/2006-ல் ஆணையர் அறிக்கை மற்றும் மாதிரி வரைபடமும் கடந்த 18.01.2007 அன்று தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றாலும் நான் கடந்த 25.02.2008 அன்று 1-ம் பிரதிவாதிக்கு தானசெட்டில்மெண்ட் எழுதிவைத்துள்ளேன் என்றாலும் 1-ம் பிரதிவாதியால் கப்பி சாலை அமைப்பதற்கு முன்பாகவே அ.வ.எண்.548/2006-ல் ஆணையர் அறிக்கையும், வரைபடமும் தாக்கல் செய்யப்பட்டுவிட்டதால் அந்த ஆணையர் அறிக்கையில் பின்னிட்டு போடப்பட்ட சாலை வெளிப்படாது என்றால் சரியல்ல. மேற்படி அந்த ஆணையர் அறிக்கை மற்றும் வரைபடமும் வேறு வழக்கிற்கு தொடர்புடையது என்றாலும் தானசெட்டில்மெண்ட் முன்பாக தாக்கல் செய்யப்பட்டிருப்பது என்றாலும் அது இந்த வழக்கிற்கு பொருந்தாது என்றாலும் சரியல்ல.

ஆவணங்கள் பரிசீலிக்க வேண்டி, குறுக்கு விசாரணை ஒத்திவைக்க வேண்டப்பட்டது. வேண்டுகோள் ஏற்கப்பட்டு, குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்காக ஒத்திவைக்கப்படுகிறது.

முடிவு நேரம்: 03.54 P.M.

| |
|---|
| Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct<br><br>sd/-S.Munusamy<br>Principal District Munsif, Attur. |

Typed by Selvi. C. Sasikala - O.S. No. 409/2007, Dt.27.02.2025.